<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 58/2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.2 |
| | | Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கல்யாணி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | முருகாந்தம் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 05.09.2024

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. நீங்கள் குடியிருக்கும் தோட்டத்திற்கு தென்புறம் கனகராஜ் தோட்டம் உள்ளது என்றால் சரிதான். உங்கள் பூமிக்கு கிழக்கு புறம் சுப்பிரமணி பூமி உள்ளது என்றால் சரிதான். சுப்பிரமணி பூமியை தாண்டி சாமியப்பன் பூமி உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக உங்கள் கணவரிடம் வாக்குமூலம் வாங்கிய பின்னிட்டு நீதிமன்றத்தில் முதன்மை சாட்சியம் அளித்துள்ளிர்கள் என்றால் சரிதான், மருத்துவமனையில் விசாரித்தார்கள். தினமும் இருவரும் சென்று தான் பால் ஊற்ற செல்விர்களா என்றா் எதாவது பொருட்கள் வாங்க வேண்டும் என்றால் நான் உடன் செல்வேன். பொ்ருள் வாங்க செல்லும்போது பைகள் எடுத்து செல்விர்கள் என்றால் சில நேரம் எடுத்து செல்வேன். சம்பவ தினத்தன்று பை எடுத்து சென்றிர்களா என்றால் இல்லை.

2. நீங்கள் கடைக்கு போக தேவை இல்லாதபோது உங்கள் கணவர் மட்டும் தான் பால் எடுத்து செல்வார் என்றால் ஆம். உங்கள் கணவர் வைத்துள்ளது Hero Honda பைக் என்றால் Hero Honda splender .அதை தவிர்த்து வேறு இரு சக்கர வாகன் உள்ளதா என்றால் இல்லை. சம்பவ தினத்தன்று உங்கள் கணவர் வண்டியில் பால் கொண்டு செல்வதாக சொல்வது பொய் என்றாலும், Hero Honda spldener வண்டியில் பால் எடுத்து செல்ல இயலாது என்றால் சரியல்ல.

3. 2ம் எதிரியின் அப்பா பெயர் என்ன என்றால் தெரியாது. 3 மற்றும் 4ம்

எதிரியின் அங்க அடையாளம் தெரியுமா என்றால் பார்த்துள்ளேன். கார்த்திக்குமார் அடையாளம் என்ன என்றால் ஒல்லியாக கருப்பபாக கொஞ்சம் வளத்தியாக இருப்பார். சபரிநாதன் மாநிறமாக கார்த்திக்கை விட உயரம் குவைாக இருப்பார். உங்களுக்கு 3ம் 4ம் எதிரியின் பெயர் மற்றும் அங்க அடையாளம் தெரியாது என்றால் சரியல்ல.

4. உங்கள் கணவர் தம்பி பெயர் என்ன என்றால் குணசேகரன். 2ம் எதிரி வீட்டில் உங்கள் கணவரது தம்பி குணசேகரன் குடியிருந்தார் என்றால் சரிதான். உங்கள் கணவர் தம்பி குணசேகரனுக்கும் உங்கள் கணவருக்கும் சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த சிவில் வழக்கில் உங்கள் உங்கள் கணவர் தாக்கல் செய்த வாழக்குரையில் மூன்றாம் நபர்கள் அத்துமீறி நுழைந்து தாக்கியதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் தெரியாது. இந்த வழக்கில் சொல்லபப்பட்ட காயங்கள் உங்களது கணவருக்கு பூமிக்குள் ஏற்பட்டதாக சிவில் வழக்கில் சொல்லியுள்ள நிலையில் இந்த வழக்கு சம்பவ இடம் பொது இடத்தில் நடந்ததாக பொய்யாக கூறுகிறிர்கள் என்றால் இல்லை.

5. உங்கள் கணவரை தாக்கியபோது தடுக்க முயற்ச்சி செய்திர்களா என்றால் அழுது சத்தம்போட்டேன். 4 நபர்கள் தாக்கியதால் என்னால் தடுக்க முடியவில்லை. அடித்தவர்களை தடுத்தபோது உங்களுக்கு காயங்கள் ஏற்பட்டதா என்றால் இல்லை. உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் நீங்கள் தடுத்திர்ப்பிர்கள் என்றால் சரியல்ல. உங்கள் வீட்டிற்கும் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு துூரம் என்றால் 200–250 மீட்டர் இருக்கும். உங்கள் வீட்டில் இருந்து பார்த்தால் தன்னாசியப்பன் கோவில் தெரியாது என்றால் தெரியும். நீங்கள் வழக்கிற்காக பொய் சொல்கிறிர்கள் என்றாலும் வரைபடத்தில் உங்கள் வீடு காட்டப்படவில்லை என்றாலும் சரியல்ல.

6. சாமியப்பன் வீட்டிற்கும் சம்பவ இடம் நடைபெற்றதாக சொல்லப்பட்ட வீட்டிற்கும் எவ்வளவு துூரம் என்றால் 700 மீட்டர். நீங்கள் சொன்னபடி சம்பவம் நடைபெற்றிருந்தால் சத்தம்கேட்டு அவர்கள் வந்திருக்க முடியாது என்றால் சரியல்ல, சாமியப்பன் பால் வாங்க வீட்டிற்கு வந்தார்கள். சாமியப்பன் வீட்டில் கரவை மாடுகள் உள்ள நிலையில் உங்கள் வீட்டிற்கு பால் வாங்க வந்ததாக பொய்யாக கூறுகிறிர்கள் என்றால் சரியல்ல. சாமியப்பன் என்பவருக்கு பல ஏக்கர் நிலம் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவத்தில் உங்கள் பைக்கிற்கு சேதாரம் ஏற்படவில்லை என்றால் சரிதான். நீங்கள் கொண்டு சென்ற பால் கீழே ஊற்றியது என்றால் சரிதான். குறிப்பாக யார் யார் தாக்கியதால் உங்கள் கணவருக்கு காயம் ஏற்பட்டது என்று சொல்ல முடியாது என்றால் சொல்லமுடியும்.

7. உங்கள் கணவருக்கு காயம் ஏற்பட்ட போது அவர் அணிந்த துணிகளில் ரத்தம் வடிந்ததா என்றால் ஆம். கீழே ரத்தக்கறை படிந்ததா என்றால் கவனிக்கவில்லை. ரத்தக்கறை படிந்த ஆடை உடன் தான் உங்கள் கணவர் சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றால் சரிதான். ரத்தம் படிந்த துணிகளை போலிசார் கைப்பற்றவில்லை என்றால் போலிசார் கேட்கவில்லை. உங்கள் கணவருக்கு ஏதோ ஒரு வகையில் ஏற்பட்ட காயத்தை கொண்டு எதிரிகள் மீது உள்ள முன்

விரேதத்தை கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல. உங்கள் கணவருக்கும் உங்கள் கணவர் தம்பிக்கும் பிரச்சனை ஏற்பட்டபோது 2ம் எதிரி சொல்லி கொடுத்ததாகத்தான் என்று தவறாக என்னித்தான் அவர்கள் மீது விரோதம் கொண்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளிர்கள் என்றால் சரியல்ல.

8. இவ்வழக்கு சம்பவத்தன்று 2ம் எதிரி அவருக்கு ஏற்பட்ட தோள்பட்டை வலிக்காக சிகிச்சை எடுத்துக்கொண்டிருந்தார் என்றால் இல்லை, சம்பவ இடத்தில் இருந்தார். உங்கள் கணவரை தாக்கியதாக சொல்லப்பட்ட கம்பியில் ரத்தக்கறை இருந்ததா என்றால் கவனிக்கவில்லை. கருப்பன்ன் வாத்தியாருக்கு சொந்தமான தோட்டத்தில் குழி தோண்டி பைப் போட்டார்கள் என்று சொல்லியுள்ள நிலையில் பைப் உள்ளதா என்றால் அப்போது இருந்தது. இந்த வழக்கு எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்பதற்காக உங்கள் கணவருக்கு ஏதோ ஒரு வகையில் ஏற்பட்ட காயத்தை கொண்டு உங்கள் கணவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தன்று நீங்கள் பால் ஊற்ற செல்லவில்லை என்றால் சரியல்ல. இது பொய் வழக்கு என்பதால் தான் உங்கள் கணவர் தாக்கல் செய்த சிவில் வழக்கில் சம்பவ இடம் அவருடைய பூமிக்குள் நடைபெற்றதாக சொல்லிவிட்டு அடிதடி பிரச்சனைக்காக பொது இடத்தில் நடந்ததாக முன்னுக்கு பின் முரணாக சம்பவ இடத்தை குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.